Volume 1 Issue 1 December 2020 ISSN:

# சிவவாக்கியரின் இறை நெறி

**முனைவர் சி. சதானந்தன்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை, தமிழ்நாடு

**நுழைவாயில்**

உலகில் மக்களாய்ப் பிறப்பெடுத்தவர்கள் இறைவனைச் சென்றடைய பல்வேறு மார்க்கங்களைக் கடைபிடிக்கின்றனர். இறைவனின் திருவடிகளை நாள்தோறும் மலரிட்டு வணங்கிப் பூசனைகள் செய்து அவனருள் நாடி நிற்பது ஒரு நெறி. யோகத்தில் ஆழ்ந்து இறைவனைத் தம்முடைய உள்ளத்தில் நாடித் தேடி அவன் வசமாகி அவனைக் கண்டு தெளிந்து ஞானம் அடையும் நெறி மற்றொரு வகை நெறி. இந் நெறிகளில் சித்தர்கள் யோக நெறியை மேற்கொண்டவர்களாக இருப்பதைக் காணலாம். எந்நெறியாயினும் உள்ளத்தில் உண்மையும் தூய்மையும் இருந்தால் இறை அருள் கிட்டும் என்பதே திண்ணமாகும். இக்கட்டுரையில் சித்தர்கள் எத்தன்மையர்கள், சிவவாக்கியரின் வாழ்க்கை வரலாறு, உள்ளத்தில் இறைவனைக் காணும் நெறியைச் சிவவாக்கியர் எங்ஙனம் தம்முடைய பாடல்களில் உறுதியாகச் சொல்லிச் செல்கிறார் என்பனவற்றை எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கங்களாகும்.

**சித்தர்கள்**

சித்தர் என்ற சொல்லிற்கு உள்ளார்ந்த வெவ்வேறான பொருள்கள் இருக்கின்றன. சித்தர் என்ற வடமொழிச் சொல்லுக்கு ‘நிறைவடைந்தவன்’ என்பது பொருளாகும். ‘சித்’ என்றால் ‘அறிவு’ என்று பொருள். எனவே சித்தர் எனும் சொல் ‘அறிவர்’ என்று பொருள் தருகிறது. ‘சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர்’ என்றும் “சித்தர் சிவலோகம் இங்கே தரிசித்தோர்” (திருமந்திரம், பா. 125) என்றும் “யோகச் சமாதி உகந்தவர் சித்தரே” (திருமந்திரம், பா. 1490) என்றும் “சித்தர் சிவத்தைக் கண்டவர்” (திருமந்திரம், பா. 2526) என்றும் பல்வேறான வரையறைகளைத் திருமந்திரமும் அதன்வழி சான்றோர்களும் தருகின்றனர். “வாலையைப் பூசிக்கச் சித்தரானார்” (கொங்கணச் சித்தர், பா. 74) என்று கொங்கணரும் “ஊதியேதோ ரூதறிந்தா லவனே சித்தன்” (அகத்தியர், பா. 7) என்று அகத்தியரும் “ஆத்தாளைப் பூசித்தோன் அவனே சித்தன்” (கருவூரார், பா. 18) என்று கருவூர்ச் சித்தரும் கூறுகின்றனர். இவ்வாறு சித்தர் என்பதற்குப் பல வரையறைகள் சித்தர்களின் பாடல்களிலும் சான்றோர்களின் நூல்களிலும் தொடர்ந்து சொல்லப்பட்டு வருகின்றன.

“சித்தியை அடைந்தவனே சித்தன். சித்தி என்பது மனோரீதியான ஆன்மிக சக்தி. யோக சாத்திரத்தில் அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிரகாமியம், ஈசித்வம், வசித்வம், காமாவசாயித்வம் என்பதாக எட்டு வகையான சித்திகள் உள்ளன. இந்த எட்டுவகையான சித்திகளையும் அறிந்தவர்களாக சித்தர்கள் விளங்கினர்.” (த.ந.கணபதி, தமிழ்ச் சித்தர் மரபு, ப. 30)

சித்தர்கள் குறித்துக் கற்பவரிடையே சித்தர்கள் வெளிப்படையாகக் கூறாமல் பரிபாஷையில் கூறுகின்றனர் என்றும் உண்மைகளை மறைக்கின்றனர் என்றும் மனக்குறை உண்டு. ஆனால் இவ்வாறு மனக்குறை கொள்ள வேண்டாம் என்று காரைச் சித்தர் கூறுகின்றார்.

சித்தரெலாம் உண்மைதனை மறைத்தார் என்றே
செப்பிமனப் பால்குடிக்க வேண்டாம் சொன்னேன்
சித்தர்மொழி நூலதனைத் தொட்ட போதே
சித்தர் எலாம் ஒற்றர்எனச் சேர்ந்து நிற்பார்
சித்தமுறுங் குணநிறைவில் நாட்டம் கொள்வார்
சிறிது அழுக்கைக் கண்டாலும் விலகிப் போவார்
சித்தநிறை வுள்ளவர்க்கே சித்தி தோன்றும்
சித்தமிலார் வித்தையெலாம் சிரிப்பே கண்டீர்! (காரைச் சித்தர், பா.6)

சித்தர்கள் எல்லோரும் உண்மைகளை மறைத்தார் என்று கற்பித்துக் கூற வேண்டாம். சித்தர்களின் நூல்களைக் கற்கக் கையால் எடுத்ததுமே எல்லாச் சித்தர்களும் ஒற்றர் போல் உம்மைச் சுற்றி நிற்பர். சித்தம் தொடர்பு உடைய குணம் நிறைவதில் நாட்டம் கொள்வர். சிறிதேனும் அழுக்கைக் கண்டாலும் விலகிப் போவர். சித்தம் நிறைவானவர்க்கே சித்தி தோன்றும். சித்தம் (மனம்) ஒன்றாதவரின் மந்திரம் சிரிப்புக்கே உரியதாம். (சித்தர் பாடல்கள் மூலமும் உரையும், முனைவர் அ.அறிவொளி, ப. 575)

இதனால் மன ஒழுக்க நிலையிலும் ஒருமைநிலையிலும் நின்று சித்தர்களை அணுகினால் அவர்களின் கருத்துக்கள் தெளிவாக விளங்க சித்தர்களே அருள்புரிவர் என்பதைத் தெளிவாக உணரலாம்.

**சிவவாக்கியரின் வாழ்க்கை**

சித்தர்களில் சிவவாக்கியரும் சித்திகளைக் கற்றவராக விளங்குவதையும் ஆசையற்று விளங்குவதையும் அவரது வாழ்க்கையிலிருந்து அறியமுடிகிறது. சிவவாக்கியரின் வாழ்க்கை வரலாற்றை அகத்தியர் 12000, போகரின் சப்த காண்டம் 7000 ஆகிய இரண்டு நூல் வழியாக அறியலாம்.

சிவவாக்கியர் என்னும் பெயர், இவர் பிறக்கும் பொழுது ‘சிவ சிவ’ என்று ஒலியெழுப்பியதால் இப்பெயர் வந்தது என்றும் ‘சொல்லுவேன் சிவவாக்கியம்’ எனத் தம்முடைய முதற்பாடலில் அமைந்தமையால் இப்பெயர் வந்தது என்றும் வெவ்வேறு வகையில் கூறுவர்.

சிவவாக்கியரின் தந்தை இவர் கருவில் இருக்கும்போதே நோய்வாய்ப்பட்டு இறந்து போனார் என்றும், இவர் தாய் இவர் பிறந்த போதே இறந்து போனார் என்றும் பிரசவம் பார்த்த மருத்துவச்சியே இவரை வளர்த்தார் என்றும் கூறப்படுகிறது.

அகத்தியர் தம்முடைய ‘அகத்தியர் பனிரெண்டாயிரம்’ என்னும் நூலில் சிவவாக்கியரின் தாய் அருந்ததி போன்ற கற்புக்கரசி என்றும் தந்தை தெய்வச் சிலைகள் செய்யும் தொழில் செய்து வந்தான் என்றும் பதிவு செய்துள்ளார்.

“திருந்தவே சிவவாக்கியர் தந்தை தாய்மார்
சிற்பரனே அவருடைய வள்ளல் கேண்மோ
அருந்ததிக்கு ஒப்பான சிவவாக்கியர் தாய்தான்
அப்பனே அவருடைய பணிகள் கேளே (434 - சித்தர்கள் வரலாறு, ப. 158)
. . . . . . . துணிவுடனே சிலை செய்து கருக்கள் கட்டி
துப்புரவாய்ப் பணிதி மிகச் செய்வார் பாரே” (435 - சித்தர்கள் வரலாறு, ப. 158)

சிவவாக்கியரின் பெற்றோர்கள் தங்கள் மகன் சரியான குருவிடம் சேர்ந்து பயின்று பல நிலைகளில் தேர்ச்சி அடைய வேண்டும் என்று இறைவனிடம் வேண்டியிருந்தனர். அவர்களின் நீண்ட நாள் எண்ணத்திற்கேற்ப அவர்கள் இல்லாத நிலையிலும் வளர்க்கப்பட்ட செவிலித்தாயின் முயற்சியால் இறைவனின் கருணையால் சிவவாக்கியர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். சிவவாக்கியர் பதினெண் சித்தர்கள் மரபில் சென்று வேதாந்த சிவவாக்கியரானார் என்று அகத்தியர் தம் பன்னிரண்டாயிரம் எனும் நூலில் பாடுகின்றார்.

“பையவே ஞானப் பாலமிர் தமேறி
பாலனுக்குச் சின்மயத்தின் மயக்கங் கொண்டு
வெய்யபுகழ் பதினெண் பேர்சார்பிற் சென்று
வேதாந்த சிவ்வாக்கிய ரானார் காணே” (440)

மேலும் கல்வி கற்று யோக நெறியில் சென்று அஷ்டசித்திகளையும் அடைந்தார் (441) என்றும் அகத்தியர் கூறுகிறார்.

போகர் தம்முடைய சப்த காண்டம் 7000 எனும் நூலில் சிவவாக்கியர் தை மாதத்தில் மகர நட்சத்திரத்தில் பிறந்தார் என்றும் சங்கர குலத்தில் பிறந்தார் என்றும் பின்னாளில் குறப் பெண்ணை மணந்து கொண்டார் என்றும் கூறுகிறார்.

"வகுத்தேனே சிவவாக்கியர் சாதி பேதம்
வளமான சங்கரகுலம் என்னலாகும்
தொகுப்புடனே தலைமுறைகள் இருபதாகும்
தோறாமல் சாத்திரங்கள் புகன்றவாரே" (5704)

ஐம்பத்தொரு வயது வரை திருமணம் செய்து கொள்ளாமல் தனியனாக இருந்தார். பிறகு திடீரென்று திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று ஆசை வந்தது. அதனால் இவரின் தாய் தந்தையர் தக்கதொரு பெண்ணைப் பார்த்து மணம் செய்து வைத்தார்கள்.

"மூச்சடங்கி மடந்தனிலே இருந்த சித்து
மூர்க்கமுடன் சமுசாரம் வேண்டியல்லோ
பாச்சலுடன் தாய் தந்தை சீர் பாதத்தைப்
பணிந்துமே மனதுவந்து கேட்டார் தாமே"

சிவவாக்கியருக்குச் சிவானந்தர் பிறந்தார். சிவவாக்கியர் திருமூலர் மரபில் வந்த பெண்ணின் மகன் என்றும் போகர் கூறுகிறார். அகத்தியரும் போகரும் சிவவாக்கியர் குறித்த செய்திகளை இவ்வாறு கூற இவர் குறித்துப் புராணங்களில் காணப்படுவது போன்ற கர்ணபரம்பரைக் கதையாக ஒரு கதை பரவலாகக் கூறப்பட்டு வருகிறது.

**சிவவாக்கியர் குறித்த கர்ணபரம்பரைக் கதை**

சிவவாக்கியர் கல்வியெல்லாம் கற்ற பின்னர் குருவைத் தேடி அலைகின்றார். அப்போது காசிக்குச் செல்கின்றார். அங்கு ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளியைக் காண்கிறார். அவரைக் கண்டவுடன் இவரே நம் குரு என்ற உணர்வு ஏற்பட அவருடைய திருவடியில் விழுகின்றார். அப்போது அக் குரு அவரிடம் சில காசுகளைக் கொடுத்துத் தம் தங்கையாகிய கங்கையிடம் கொடுத்துவிட்டு வருமாறும் பேய்ச்சுரைக்காய் ஒன்று கொடுத்து அதன் கசப்பு நீங்கக் கழுவிவிட்டு வருமாறும் கூறுகின்றார். சிவவாக்கியரும் அவ்வாறே குரு கொடுத்த காசை வாங்கிக் கொண்டு கங்கை நதியில் சென்று காசு கொடுக்க முனைந்த போது வளையல்கள் அணிந்த கை ஒன்று வந்து அக்காசுகளைப் பெற்றுக் கொள்கின்றன. பேய்ச்சுரைக்காயைத் தண்ணீரில் கழுவியுடன் அதன் கசப்புத் தன்மை நீங்குகின்றது.

சிவவாக்கியர் மிகுந்த வியப்புடன் நடந்த செய்தியைக் குருவிடம் கூறுகிறார். உடனே அவர் கங்கையில் கொடுத்த காசை இங்குள்ள தோல் பையில் எம் தங்கை கொடுப்பாள். வாங்கி வா என்று கூறுகிறார். இவரும் தோல் பையில் கையை விட்டவுடனே மீண்டும் வளையல் அணிந்த கை இவரிடம் காசைக் கொடுக்கிறது. பின்னர் குரு, சிவவாக்கியரின் பக்குவநிலையைக் கண்டு இன்னும் கொஞ்ச காலம் இல்லறத்தில் ஈடுபட்டு அதன் பின்னர் துறவு பூணட்டும் என்று எண்ணி, சிவவாக்கியரின் காதில் மந்திரம் கூறிக் கையில் கொஞ்சம் மண்ணையும் பேய்ச்சுரைக்காயையும் கொடுத்து இதை உனக்குச் சமைத்துக் கொடுப்பவரைத் திருமணம் செய்து கொண்டு இல்லறத்தில் கொஞ்சகாலம் ஈடுபட்டுப் பின்னர் துறவு மேற்கொள்ளுமாறு கூறுகின்றார்.

**சிவவாக்கியர் திருமணம் புரிதல்**

சிவவாக்கியரும் குருவை வணங்கி மணலையும் பேய்ச்சுரைக்காயையும் எடுத்துக் கொண்டு செல்கின்றார். இவரின் உடல் வாகு கண்டு பல பெண்கள் திருமணம் செய்து கொள்ள முன் வருகின்றனர். ஆனால் இவர் மணலையும் பேய்ச் சுரைக்காயையும் கொடுத்துச் சமைக்கக் கூறியவுடன் அஞ்சி விலகுகின்றனர். அப்போது ஒரு வீட்டின் முன் குறப்பெண் ஒருத்தியைச் சந்திக்கிறார். அவர் மனதில் இவள் தனக்குப் பொருத்தமானவளாக இருப்பாள் என்ற எண்ணம் தோன்றுகிறது. உடனே அப்பெண்ணிடம் மணலையும் பேய்ச்சுரக்காயையும் கொடுத்துத் தமக்கு உணவு சமைக்க முடியுமா என்று கேட்கிறார். அப்பெண்ணும் எவ்வித தயக்கமும் கொள்ளாமல் மணலையும் பேய்ச்சுரைக்காயையும் சமைத்து உணவாகப் பரிமாறுகிறாள். அதைக் கண்டு மகிழ்ந்த சிவவாக்கியர், பெண்ணே நீ என்னைத்

*திருமணம் செய்து கொள்கிறாயா? என்று கேட்கிறார். அப்பெண் தன் பெற்றோர் சம்மதித்தால் எனக்கும் சம்மதம் என்று கூறுகிறாள்.*

*காட்டிலே விறகு வெட்டச் சென்ற அப்பெண்ணின் பெற்றோரும் வீட்டிற்கு வருகின்றனர். சிவவாக்கியர் நடந்ததைக் கூறிப் பெண்ணைத் திருமணம் செய்து தருமாறு கேட்கின்றார். நீங்கள் எங்களுடனே இருப்பதென்றால் திருமணத்திற்குச் சம்மதம் என்று பெற்றோரும் தெரிவிக்கின்றனர். சிவவாக்கியர் அதற்குச் சம்மதம் தெரிவித்துத் திருமணம் செய்து கொண்டு அவர்களுடனே தங்கியிருந்து மூங்கிலை வெட்டிக் கூடை பின்னும் தொழிலைச் செய்து வருகின்றார்.*

***காட்டில் தங்கத்தைக் காணல்***

*ஒருநாள் வழக்கம் போல் காட்டில் மூங்கில் வெட்டிக் கொண்டிருந்த போது அம்மூங்கிலிலிருந்து தங்கம் பொடிப்பொடியாக உதிர்வதைக் கண்டு அஞ்சி 'ஆட்கொல்லி ஆட்கொல்லி' என்று அலறினார். அப்போது அங்கு வந்த நால்வர், என்ன ஆயிற்று என்று வினவ, தங்கப் பொடிகளைக் காட்டி 'ஆட்கொல்லி இது ...' மனிதர்களைக் கொன்றுவிடும் தன்மை உடையது என்று கூறுகின்றார். அந்நால்வரும் தங்கத்தைப் பார்த்து ஆட்கொல்லி என்று கூறுகின்றாரே இவருக்குச் சித்தம் கலங்கியிருக்கும் என்று எண்ணி இவரை அனுப்பி விட்டுத் தங்கத்தை நாம் பங்குபோட்டுக் கொள்ளலாம் என்று திட்டமிடுகின்றனர். உடனே சிவவாக்கியரிடம், ஐயா! இது ஆட்கொல்லிதான், எனவே நீங்கள் இங்கு இருக்க வேண்டாம், சென்று விடுங்கள் என்று கூறுகின்றனர். சிவவாக்கியரும் அவ்விடம் விட்டுச் செல்கின்றார்.*

*அந்நால்வரும் தங்கப்பொடிகளை ஒன்றாகச் சேர்த்து மூட்டையாகக் கட்டுகின்றனர். பொழுது சாயவே இன்றிரவு மட்டும் இவ்விடத்திலேயே தங்கிவிட்டுக் காலையில் எழுந்து ஊருக்குள் சென்று விற்றுப் பணம் பங்கிட்டுக் கொள்ளலாம் என எண்ணி, நால்வருள் இருவரை இரவு உணவு வாங்கி வருமாறு கூறுகின்றனர். இருவர் காட்டிலேயே தங்கத்திற்குக் காவலாக இருக்க இருவர் உணவு வாங்கச் செல்கின்றனர். அவ்விருவரும் உணவு உண்டு காட்டிலிருக்கும் இருவர்க்காக உணவுப் பொட்டலம் வாங்கி வரும்போது அவ்வுணவில் விடம் கலந்து விடுகின்றனர். இவ்வுணவை உண்டு காட்டில் உள்ள இருவரும் இறந்து விட்டால் நாம் இருவர் மட்டும் தங்கத்தைப் பங்கிட்டுக் கொள்ளலாம் என்று திட்டமிடுகின்றனர்.*

*காட்டில் உள்ள இருவரும் உணவு வாங்கச் சென்றவர்கள் வந்தால் அவ்விருவரையும் அங்குள்ள கிணற்றில் தள்ளிக் கொன்றுவிட்டுத் தாமிருவரும் தங்கத்தைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று திட்டமிடுகின்றனர். அவ்வாறே உணவு வாங்கியவர்கள் வந்தவுடன் கிணற்றில் ஏதோ இருப்பதாகக் கூறி அவர்களைக் கிணற்றில் தள்ளிக் கொன்றுவிட்டு அவர்கள் வாங்கிவந்த உணவை உண்கின்றனர். உணவில் ஏற்கனவே விடம் கலக்கப்பட்டிருந்ததால் அவ்விருவரும் அங்கேயே இறக்கின்றனர். பொழுது விடிகிறது. சிவவாக்கியர் காட்டிற்கு வந்து பார்க்கின்றார். அங்கு நால்வரும் இறந்து கிடக்கின்றனர். அதைப் பார்த்ததும் சிவவாக்கியர் அரற்றுகின்றார். நான்தான் கூறினேனே இத்தங்கம் ஆட்கொல்லி, இது ஆட்களைக் கொன்றுவிடும் என்று... இப்போது நால்வரும் மரணித்து இருக்கின்றார்களே! என்று எண்ணி வருந்துகின்றார்.*

***கொங்கணரும் சிவவாக்கியரும்***

*ஒருநாள் காட்டுக்குள் மூலிகையைப் பறித்துக் கொண்டிருக்கும் போது வானில் சென்ற கொங்கணரைச் சிவவாக்கியரின் ஒளி அவரை ஈர்த்தது. அப்போது அவரிடம் வந்து உரையாடிச் சென்றார். மற்றொருமுறை சிவவாக்கியர் வீட்டிற்குக் கொங்கணர் வருகின்றார். அப்போது சிவவாக்கியர் வீட்டில் இல்லை. அவர் மனைவி மட்டும் இருக்கின்றார். கொங்கணர் அவரிடம் வீட்டிலிருந்து இரும்புத்துண்டு எடுத்து வரச்சொல்லி அதைத் தங்கமாக மாற்றி அவரிடம் கொடுத்துவிட்டுச் செல்கின்றார்.*

*சிவவாக்கியர் வீட்டிற்கு வந்ததும் மனைவி நடந்ததைக் கூறுகின்றார். அப்போது அங்கிருந்த கல்லின் மீது சிறுநீர் கழித்து அதைத் தண்ணீர் ஊற்றிக் கழுவுமாறு கூறுகின்றார். அவருடைய மனைவியும் தண்ணீர்*

ஊற்றிக் கழுவிவிட அக்கல் தங்கமாக மாறுகிறது. அதைப் பார்த்தவுடன் அவருடைய மனைவி திகைக்கின்றார். உனக்குத் தங்கம் வேண்டுமென்றால் இதையும் எடுத்துக் கொள் என்று சிவவாக்கியர் கூறுகின்றார். உடனே அவருடைய மனைவி எனக்கு இதிலெல்லாம் ஆசை இல்லை என்று கூறுகின்றார். அப்படியென்றால் இதைக் கொண்டு போய்க் கிணற்றில் போட்டுவிடு என்று கூறுகிறார். அவருடைய மனைவியும் அத்தங்கத்தைக் கொண்டு போய் கிணற்றில் போட்டுவிடுகின்றார். சிவவாக்கியர் தன் மனைவியின் பக்குவ நிலை கண்டு மகிழ்ச்சி அடைகிறார். பின்னர் சிலகாலம் இல்லறத்தில் இருந்து கும்பகோணத்தில் சித்தி அடைந்தார்.

**சிவவாக்கியரின் பாடல்கள்**

சிவவாக்கியர் இயற்றியதாக 550 பாடல்கள் கிடைக்கின்றன. சென்னை, கோடம்பாக்கம், பிரேமா பிரசுரம் வழி அறு.இராமநாதன் அவர்கள் பதிப்பித்த ‘பெரிய ஞானக் கோவை எனும் சித்தர் பாடல்கள்’ எனும் நூலில் 526 பாடல்கள் இருக்கின்றன. முனைவர் அ.அறிவொளி அவர்கள் ‘சித்தர் பாடல்கள் மூலமும் உரையும்’ என்ற நூலில் 550 பாடல்களைப் பதிவு செய்துள்ளார். 550 பாடல்கள் அமைந்துள்ள பல பதிப்புகளைப் பார்க்கும் போது சில பாடல்கள் மீண்டும் மீண்டும் இடம்பெறுகின்றன. சித்தர்களில் சிவவாக்கியர் புரட்சிகரமானவராகக் காட்சியளிக்கிறார். சாதி சமய சழக்குகளைக் களைகின்றார். பெண்களுக்கு எதிரான கருத்துகளை உடைத்துப் பேசுகின்றார். தீண்டாமைக்கு எதிரான கருத்துகளை ஆணித்தரமாகப் பேசுகின்றார். வெறும் சடங்குகளால் மட்டும் இறைவனைக் காண முடியாது என்று உறுதியாகச் சொல்கிறார்.

இவருடைய பாடல்களில் சில பாடல்கள் ‘ராம ராம’ எனக் குறிப்பிட்டிருப்பதால் இவர் வைணவர் என்றும் திருமழிசை ஆழ்வாரே பின்னாளில் சிவவாக்கியர் ஆனார் என்றும் சிலர் குறிப்பிடுவதைப் பெரும்பாலான ஆய்வாளர்கள் ஒப்புக் கொள்வதில்லை. மேலும் பத்துப்பாடல்கள் கூட இராமனைப் பற்றிய பாடல்கள் இல்லை என்பதையும் 540 பாடல்களுக்கும் மேலாக சிவத்தைப் பற்றிய பாடல்களே இவர் பாடியுள்ளார் என்பதையும் வைத்துப் பார்க்கும் போதும் பாடலின் அமைப்பு மற்றும் கருத்துகளை நோக்கும் போதும் இவர் வேறு, திருமழிசை ஆழ்வார் வேறு என்பதை அனைவராலும் உணரமுடியும்.

**சிவவாக்கியர் கடவுள் மறுப்பாளரா?**

சிவவாக்கியரின் இறைச் சிந்தனை பல்வேறு கோணங்களில் பார்க்கப்படுகிறது. நாத்திகம் பேசுவோர் இவருடைய பாடல்களில் சில அடிகளை மட்டும் எடுத்துக்காட்டி ஒரு சித்தரே கடவுள் இல்லை என்று கூறுகிறார். சிவவாக்கியர் என்னும் சித்தர் கடவுள் மறுப்பாளர் என்று கூறுவர். ஆனால் உண்மையில் சிவவாக்கியர் கடவுள் மறுப்பாளர் இல்லை என்பதை அவரது பாடல்களை முழுமையாகப் படிப்போர் உணரலாம். சிவவாக்கியர் கடவுள் மறுப்பாளர் என்று குறிப்பிடக் கூடிய அடிகள் அமைந்த பாடலை முழுமையாகப் படித்துப் பார்த்தால் நாத்திகம் பேசுவோர் கூறுவது எத்தகைய முரணான கருத்து என்பது தெளிவாக விளங்கும். இன்னும் சொல்லப்போனால் அக்குறிப்பிட்ட சில அடிகள் பொருள் காணும் போக்கில் கருத்து மாறுபாடு உள்ளதையும் நாம் காணமுடியும். சிவவாக்கியரின் கடவுள் மறுப்புப் பாடலாக அனைவராலும் எடுத்துக்காட்டக் கூடிய பாடலடிகள்,

"நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பம் சாத்தியே
சுற்றிவந்து மொணமொணென்று சொல்லு மந்திரம் ஏதடா”

எனும் இரண்டு அடிகள் மட்டுமே. ஆனால் பாடலின் அடுத்த இரண்டு அடிகளையும் பார்த்தால் சிவவாக்கியர் கடவுள் மறுப்பாளரன்று என்பது தெளிவாகப் புலப்படும்.

“நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ" (சிவவாக்கியர், பா. 520)

என்பதே பாடலின் அடுத்த இரண்டு வரிகளாகும். இந்தப் பாடலுக்குப் பொருள் கொள்ளும் முறை என்பது ஒவ்வொரு பார்வையிலும் வேறுபடுகிறது.

**மந்திரம் வழியாகும்**

ஒரு கற்சிலையை மந்திரங்கள் ஓதி தெய்வம் என்று பெயர் சூட்டி அதைக் கோயில் கருவறை என்ற இடத்தில் நட்டுவைத்து அச்சிலைக்குப் பூமாலைகள் அணிவித்து அழகு செய்வித்து அதைச் சுற்றிச்சுற்றி வந்து நாயன்மார்களும் ஆழ்வார்களும் முன்னோர்களும் பாடி வைத்த பாடல்களை மந்திரங்களாகக் கூற வேண்டும். ஏனென்றால் அம் மந்திரங்கள் இறைவனிடம் நம்மைச் சேர்ப்பிக்கும் ஒரு வழியாகும். சிவவாக்கியர், ''சொல்லும் மந்திரம் ஏது அடா'' என்கிறார். இங்கே கூறப்படும் 'ஏது' என்ற சொல்லிற்கு 'வழி' என்று பொருள். (ஏதுகரம் - வழிவகை, கழகத்தமிழ் அகராதி) எனவே 'கல்லைத் தெய்வம் என்று வணங்கிப் பூமாலைச் சூட்டி மந்திரம் கூறி வழிபடுவது என்பது இறைவனின் திருவடியைச் சேர்வதற்கான வழியாகும்' என்பதே இப்பாடலின் முதலிரண்டடிக்குப் பொருள் எனக் கொள்ளலாம்.

**பேசுமோவா? பேசுமேவா?**

'நட்ட கல்லும் பேசும் ஓ நாதன் உள் இருக்கையில்' என்று பாடலைப் பிரித்துப் பார்த்துப் பொருள் காணவேண்டும். அதாவது மனிதன் இறைவனைத் தன் உள்ளத்தில் பார்க்கக் கூடிய ஆற்றலைப் பெற்று உள்ளத்தில் இறைவனைக் கண்டுவிட்டால் நட்ட கல்லுக்குள் இருக்கின்ற தெய்வமும் அவனிடம் பேசும் என்பதாகும். இங்கு ஓகாரம் வியப்புக்குறிப்பாகும். 'நட்டகல்லும் பேசுமே நாதன் உள்ளிருக்கையில்' என்பதாகக் கூட சிவவாக்கியர் பாடியிருக்கலாம். பிற்காலத்தில் வந்தவர்கள் ஏகாரத்தைத் துணைக்காலிட்டு ஓகாரமாக மாற்றிவிட்டனரோ என்றும் கூட எண்ணுவதற்கு இடமிருக்கிறது. 'பேசுமே' என்பதைப் 'பேசுமோ' என எளிமையாக மாற்றியும் அமைத்திருக்கலாம்.

**சட்டியும் சட்டுவமும் கறிச்சுவை அறியும்!**

மண்பானைகளில் சாம்பார், குழம்பு வைப்பதற்கும் இரசம் வைப்பதற்கும் தனித்தனிப் பாத்திரங்களைப் பயன்படுத்துவது உண்டு. குறிப்பாகப் பெண்கள் சோறு சமைக்கும் பாத்திரத்தில் குழம்பு போன்றவற்றைப் பயன்படுத்தமாட்டார்கள். குழம்பு வைக்கும் பாத்திரத்தில் பாலைக் காய்ச்சுவதில்லை. கறி என்றால் 'மிளகு' என்று பொருள். மிளகும் இன்னபிற காய்களும் சேர்த்துக் குழம்பு வைக்கின்ற போது அதன் காரத்தன்மை அப்பாண்டத்திலிருந்து நீங்குவது இல்லை. பெருங்காயம் போட்டு வைத்திருந்த பாண்டத்திலிருந்து பெருங்காயத்தை முழுமையாக எடுத்துக் கழுவி வைத்தாலும் அதன் வாசனை அப்பாண்டத்தை விட்டுச்செல்வதில்லை. அவ்வாறே சைவ சித்தாந்த கருத்துப்படி, மூலமலமான ஆணவ மலம் ஆன்மாவை விட்டு நீங்குவதில்லை. இவற்றை மனங்கொண்டே சிவவாக்கியர் 'சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியும் ஓ' (அறியுமோ) என்று பாடியுள்ளார். இவ்வடியைச் 'சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமே' என்றும் கூட அமைத்து நாம் பொருள் காணலாம். இவ்வாறு பொருள் கொள்ளுவதற்குக் காரணம் சிவவாக்கியரின் ஏனைய பாடல்கள் கடவுள் உள்ளத்தில் இருப்பதையும் எல்லா இடங்களிலும் இருப்பதையும் உறுதிப்படுத்திக் கூறுகின்றன என்பதே ஆகும்.

**எங்குமிருக்கும் இறைவன்**

''பரம் இலாதது எவ்விடம்? பரம் இருப்பது எவ்விடம்?
அறம்இலாத பாவிகட்குப் பரம்இலைஅஃது உண்மையே
கரம்இருந்தும் பொருளிருந்தும் அருளிலாத போதுஅது
பரம்இலாத சூன்யமாகும் பாழ்நரகம் ஆகுமே'' (சிவவாக்கியர், பா. 528)

பரம்பொருள் இல்லாத இடத்தையோ பரம் பொருள் இருக்கின்ற இடத்தையோ குறிப்பிட்டுக் காட்ட யாராலும் இயலாது. அறமே இறைவனை உணரவைக்கிறது. அறம் இல்லாத அறம் செய்யாத பாவிகளுக்குப் பரம்பொருள் துணையாக இல்லை என்பதே உண்மையாகும். அவ்வாறே கொடுப்பதற்குப் பொருளும் கையும் இருக்கும்போது உள்ளத்தில் அருள், இரக்கம் இல்லை என்றால் பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்கிற எண்ணம் எழாது. அப்படிப்பட்ட உள்ளம் பரம்பொருள் இல்லாத சூன்யமாகும். அவர்கள் உள்ளமே பாழ்நரகம் ஆகும்.

இறைவன் உள்ளத்தில் இருக்கிறான் என்கிற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வுண்மை உள்ளத்தில் ஆழமாக உணர்ந்து கொள்ளும் பாங்கு வளர இறைவழிபாடு முக்கியம். இறைவழிபாடானது சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு படிநிலைகளைக் கொண்டது. சரியையும் கிரியையும் கடந்தாலே யோக நிலைக்குச் செல்ல முடியும். யோக நிலையில் சென்றாலே இறைவனை உள்ளத்தில் காணும் நிலையை அடைய முடியும். கோயில் செல்வதும் குளங்களில் மூழ்கி எழுவதும் சரியை மார்க்கத்தில் அடங்கும் தன்மையாகும். இவையிரண்டும் இறைவனின் திருவடியை அடைய வழிகாட்டுபவையாகும் என்பதைச் சொல்ல வந்த சிவவாக்கியர்,

"கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே
கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே
ஆவதும் அழிவதும் இல்லை இல்லை இல்லையே" (சிவவாக்கியர், பா. 35)

என்று கூறுகின்றார். ‘குலாமர்’ என்றால் ‘கீழ்மக்கள்’ என்று பொருள். ‘கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே’ என்றவுடன் கோயிலுக்கும் குளங்களுக்கும் சென்று மூழ்கி வழிபாடு செய்பவர்களைக் ‘கீழ்மக்கள்’ என்று சிவவாக்கியர் கூறுகிறார் என்று சொல்லிவிடக் கூடாது. இங்குக் குறிப்பிடும் ‘கீழ்மக்கள்’ என்பது கீழ்நிலையில் உள்ள மக்களைக் குறிக்கும். அதாவது சரியை, கிரியை என்பது முதல் நிலை அல்லது கீழ் நிலை. யோகம், ஞானம் என்பது அடுத்த நிலை அல்லது மேல் நிலை. எனவே சரியை, கிரியையில் இருக்கும் மக்களுக்கு கோயிலாவது ஏதாக (வழியாக) அமைகிறது. குளங்களும் வழியாக அமைகிறது. இந்நிலையிலிருந்து கடந்து ‘கோயிலும் குளங்களும் மனதிலே’ என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதையே சிவவாக்கியர், ‘கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே’ என்று கூறுகிறார்.

ஆன்மாவானது ஆவதும் அழிவதும் என்ற நிலையில்லாதது. ஆன்மாவிற்கு உருவாகின்ற நிலையோ அழிகின்ற நிலையோ இல்லை. அது அநாதி என்கின்ற கருத்தை வலியுறுத்தியே, ‘ஆவதும் அழிவதும் இல்லை இல்லை இல்லையே’ என்று உறுதியாகச் சொல்கிறார்.

மனிதர்கள் நம்முடைய உள்ளத்தில்தான் இறைவன் இருக்கிறான் என்பதை அறிந்து கொள்ளாமலேயே காலத்தைக் கடத்திக் கோயில் கோயிலாகச் சென்று சுற்றி முழுமையான நம்பிக்கையும் ஈடுபாடும் இல்லாமலேயே பலர் மாண்டு போகின்றனர். இறைவனைக் கோயிலில் காண்பதற்கும் தங்களுடைய உள்ளத்தில் காண்பதற்கும் ஆழமான நம்பிக்கை வேண்டும். நம்பிக்கை இல்லையேல் வாழ்க்கை நரகமாகிவிடும். ‘நம்பினார் கைவிடுவதில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு’ என்று சான்றோர்கள் மொழிந்துள்ளனர். இறைவன் மீதான நம்பிக்கையும் அவனைக் காண முடியும், அவனைக் காண வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்களால்தான் அவனைக் காணமுடியும் என்று திருமந்திரம் எடுத்தோதுகிறது.

ஆர்வம் உடையவர் காண்பார் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி (திருமந்திரம், பா. 273)

**இறை தேடல் உள்ளத்தில்**

இறைவனைக் காண வேண்டும் என்ற ஆர்வத்துடன் நம்முள் தேட வேண்டும். ‘என்னுடைய உள்ளத்திலேதான் இறைவன் இருக்கிறான் என்பதை நான் அறிந்து கொள்ளாமல் இருந்தேன். பின்னர்

இறைவன் என்னுள்ளத்தில்தான் இருக்கிறான் என்பதை அறிந்துகொண்டேன். எனக்குள் இருக்கும் இறைவனை என்னைத்தவிர பிறர் காண இயலாது. அவ்வாறே பிறருக்குள் இருக்கும் இறைவனை நானும் காண இயலாது. அவரவர் தன்னுள் இருக்கும் இறைவனைத் தன்னுள் தேடி உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதால் என்னுள் நான் இருந்து எனக்குள் இருக்கும் இறைவனை உணர்ந்து கொண்டேன்' என்று சிவவாக்கியர் பாடுகிறார்.

"என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே
என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லரோ
என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டேனே" (சிவவாக்கியர்,பா.7)

சித்தர்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்த திருமூலரும் இறைவனை உள்ளத்தில் காணுங்கள் என்றே முதன்மையாகக் கூறிச் சென்றார். உள்ளத்தில் இருக்கும் இறைவனின் உருவத்தை நாம் காண முடியாதவாறு அறியாமை இருளில் நாம் இருக்கிறோம். அவ் இருளில் இருந்து நாம் நீங்கினால் இறைவனைக் காண முடியும் என்பதை உணர வேண்டும்.

"உள்ளத் தொருவனை உள்ளுறு சோதியை
உள்ளம்விட் டோரடி நீங்கா ஒருவனை
உள்ளமுந் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உருவறி யாதே" (திருமந்திரம், பா. - 431)

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்" (திருமந்திரம், பா. - 1823)

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்

அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்" (திருமந்திரம் - 2944)

என்றெல்லாம் திருமந்திரம் பல பாடல்களில் இறைவனை உள்ளத்தில்தான் காண வேண்டும் என்று அறுதியிட்டுச் சொல்லுகிறது.

உள்ளத்தில் இறைவன் இருப்பதை தியானத்தில் இருந்து நமக்குள் நம்மைத் தேடி நமக்குள் இறைவனைத் தேட வேண்டும். திருஞானசம்பந்தரும் மனதிலே இறைவன் கோயில் கொண்டுள்ள தன்மையைத் தேவாரம் எனப் போற்றப் பெறும் திருக்கடைக்காப்பில் மூன்றாம் திருமுறையில் பதிவு செய்கிறார்.

"ஏதுக்க ளாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி;
மாதுக்கம் நீங்க லுறுவீர் மனம்பற்றி வாழ்மின் . . . ."
(திருஞானசம்பந்தர், மூன்றாம் திருமுறை, 54 பொது, பாடல் எண் 5)

காரண காரியங்களாலும் பேசுகின்ற மொழிகளாலும் பரஞ்சோதியாகத் திகழும் இறைவனைக் கண்டுவிட முடியும் என்று சோதித்துப் பார்க்க வேண்டாம். எல்லோருடைய உள்ளத்திலும் சுடர்விட்டு எரியும் சோதியாகத் திகழும் இறைவனை மனதில் எண்ணி மனம் பற்றி வாழுங்கள், மிகப் பெரிய துக்கம் நீங்கி வாழ்வீர்' என்று திருஞானசம்பந்தர் அறிவுறுத்துகிறார்.

நமது உள்ளத்தின் இயல்பு, எதையாவது ஒன்றை நினைத்துக் கொண்டிருப்பது. உள்ளத்தின் இத்தொழிலை 'உள்குதல்' என்பர். உள்ளத்தால் உள்ளவாறு நினைப்பவர் உள்ளத்தில் உணர்வாக இறைவன் விளங்குவான். திருநாவுக்கரசர்,

"நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்" (ஐந்தாம் திருமுறை, திருக்குறுந்தொகை, பா.1082) என்றும்,

"நினைக்கும் நெஞ்சின் உள்ளார்" (ஐந்தாம் திருமுறை, திருக்குறுந்தொகை, பா.1338) என்றும்,

"நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்தும் ஆனாய்" (ஆறாம் திருமுறை, 95 பொது, பா.07) என்றும் பல இடங்களில் பாடுவதும் சிந்திக்கத் தக்கது.

பல்லவப் பேரரசன் கட்டிய கற்கோயிலைவிட, பூசலார் நாயனார் கட்டிய மனக்கோயில் இறைவனுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைத் தந்தது. இறைவன் பூசலார் நாயனாரின் மனக்கோயிலுக்குத்தான் முதலிடம் தந்து குடி புகுந்தான் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இறைவனை உருவமாக வடிப்பதற்குச் செங்கல்லும் கருங்கல்லும் சிவந்த சாதிலிங்கமும் செம்பும் ஐம்பொன் உலோகங்களும் எனப் பல்வேறு பொருட்களைப் பயன்படுத்துகிறோம். ஆனால் இப்பொருட்களில் இறைவனைக் கண்டு வணங்குவதைக் காட்டிலும் ஓருருவமும் ஒரு நாமமும் இல்லாத இறைவனை மனதில் நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து கண்டு தெளிந்தால் உள்ளத்திலேயே இறைவனின் திருநடனக் காட்சியைக் காணஇயலும் என்று சிவவாக்கியர் அறிவுறுத்துகிறார்.

"செங்கலும் கருங்கலும் சிவந்தசாதி லிங்கமும்
செம்பிலும் தராவிலும் சிவனிருப்பன் என்கிறீர்
உம்மதம் அறிந்துநீர் உம்மைநீர் அறிந்தபின்
அம்பலம் நிறைந்தநாதர் ஆடல்பாடல் ஆகுமே" (சிவவாக்கியர், பா. 36)

உள்ளத்தில் ஆழ்ந்த பக்தி இல்லாமல் மனதைப் புற உலகில் ஓடவிட்டு நான்கு வேதங்களையும் நாள்தோறும் ஓதினாலும் இறைவனைக் காண இயலாது. காமம் போன்ற மயக்கத்திலிருந்து விடுபட்டு உள்ளம், இறைவனை உள்கிட, அவனே அந்த உள்குதலின் விளைவாகிய உணர்வாக வடிவம் பெற்று எழுந்தருள்கின்றான். இதுவே இறைவனை உள்ளத்தில் காண்பதற்குரிய இனிய எளிய வழி எனச் சிவவாக்கியர் கூறுகின்றார்.

"சாமம்நாலு வேதமும் சகலசாத் திரங்களும்
சேமமாக ஓதினும் சிவனைநீர் அறிகிலீர்
காமநோயை விட்டுநீர் கருத்துளே உணர்ந்தபின்
ஊமையான காயமாய் இருப்பன் எங்கள் ஈசனே" (சிவவாக்கியர், பா. 20)

மேலும்,

"கண்ணுக்கு இனிய கண்டு மனத்தைக் காட்டில் அலையவிட்டு,
பண்ணிடும் பூசையாலே தோழி பயன் ஒன்றில்லை அடி" (மலரும் மாலையும், கோயில் வழிபாடு)

என்று கவிமணி தேசிக விநாயகம் கூறுவதையும் இங்கு எண்ணிப்பார்க்கலாம்.

வாழ்க்கைக்குத் தேவையான கருத்துகள் நூல்களாக உள்ளத்தில் விரவி கிடக்கின்றன. அதை உணர்ந்து உள்ளத்தை வாசிக்க வேண்டும். அவ்வாறு வாசித்தால் இறைவன் சுற்றத்தார் போல் நம்முள்ளே காட்சியளித்துச் சோதிமயமாய் வாழ்வதை அறியமுடியும்.

"உற்றநூல்கள் உம்முளே உணர்ந்து உணர்ந்து பாடுவீர் . . . .
சுற்றமாக உம்முளே சோதியென்றும் வாழுமே" (சிவவாக்கியர், பா. 58)

இறைவன் உள்ளத்தில் இருக்கிறான். வெளியில் தேட வேண்டியதில்லை. உனக்குள் இருக்கும் இறைவனை நீ கண்டுகொள் என்பதைச் சிவவாக்கியர் பல பாடல்களில் பதிவு செய்துள்ளார்.

"பருகியோடி உம்முளே பறந்துவந்த வெளிதனை" (சிவவாக்கியர், பா. 86)

"என் அகத்துள் ஈசனும் யானும் அல்லது இல்லையே" (சிவவாக்கியர்,பா. 94)

"ஆறுவித்தை ஓர்கிலீர் அறிவிலாத மாந்தரே
பாரும் இத்தை உம்முளே பரப்பிரம்மம் ஆவிரே" (சிவவாக்கியர், பா. 96)

"மடலுளே இருக்கும் எங்கள் மணயரங்க சோதியை
உடலுளே நினைத்து நல்ல உண்மையானது உண்மையே" (சிவவாக்கியர், பா. 99)

“நமசிவாய அஞ்செழுத்து நம்முளே இருக்கவே
நமசிவாய உண்மையை நன்கு உரை செய் நாதனே” (சிவவாக்கியர், பா. 105)
“ஓம்நமசிவாயமே உட்கலந்து நிற்குமே” (சிவவாக்கியர், பா. 110)
“என்னுள் நின்ற என்னையன்றி யான் அறிந்தது இல்லையே” (சிவவாக்கியர், பா. 126)
“மூவராலும் அறியொணாத முக்கணன் முதற்கொழுந்து
காவலாக உம்முளே கலந்திருப்பன் காணுமே” (சிவவாக்கியர், பா. 131)
“அஞ்சும் அஞ்சும் உம்முளே அமர்ந்ததே சிவாயமே” (சிவவாக்கியர், பா. 219)
“எங்குமுள்ள ஈசனார் எம்முடல் புகுந்தபின்
பங்குகூறு பேசுவார் பாடுசென்று அணுகிலார்” (சிவவாக்கியர், பா. 224)
“கரியமாலும் அயனுமாக காணஒணாத கடவுளை
உரிமையாக உம்முளே உணர்ந்து உணர்ந்து கொள்ளுமே” (சிவவாக்கியர், பா. 236)
“ஒண்ணுமாகி உலகளித்த ஒன்றை நெஞ்சில் உன்னுமே” (சிவவாக்கியர், பா. 237)
“சத்திநீ தயவும்நீ தயங்குசங்கின் ஓசைநீ
சித்திநீ சிவனும்நீ சிவாயமாம் எழுத்துநீ
முத்திநீ முதலும்நீ மூவரான தேவர்நீ
அத்திறமும் உம்முளே அறிந்துணர்ந்து கொள்ளுமே” (சிவவாக்கியர், பா. 249)
“என் அகத்துள் என்னை நான் எங்கு நாடி ஓடினேன்
என் அகத்துள் என்னை நான் அறிந்து இலாதது ஆகையால்
என் அகத்துள் என்னை நான் அறிந்துமே தெரிந்த பின்
என் அகத்துள் என்னை அன்றி யாதும் ஒன்றும் இல்லையே” (சிவவாக்கியர், பா. 263)
“அன்று தேவர் உம்முளே அறிந்து உணர்ந்து கொள்ளுமே” (சிவவாக்கியர், பா. 277)
“கண்டிருக்கும் உம்முளே கலந்திருப்பர் காணுமே” (சிவவாக்கியர், பா. 290)
“மந்திரங்கள் உம்முளே மதிக்க நீறும் உம்முளே
மந்திரங்களாவது மனத்தின் ஐந்து எழுத்துமே” (சிவவாக்கியர், பா. 424)
“அறிந்து நோக்கி உம்முளே அயன்தியானம் உம்முளே” (சிவவாக்கியர், பா. 453)
“சோதியாக உம்முளே தெளிந்து நோக்க வல்லிரேல்
சோதிவந்து உதித்திடும் துரியாதீதம் உற்றிடும்” (சிவவாக்கியர், பா. 454)
“உன்னி உன்னி நம்முளே உய்த்துணர்ந்து பாருமே” (சிவவாக்கியர், பா. 481)
“என்னகத்தில் என்னை நான் எங்கும் ஓடி நாடினேன்
என்னகத்தில் என்னை அன்றி ஏதும் ஒன்று கண்டிலேன்
இன்னெழும்பி விண்ணகத்தின் மின்னொடுங்கும் ஆறுபோல்
என் அகத்துள் ஈசனோடு யானும் அல்லது இல்லையே” (சிவவாக்கியர்,பா. 486)
“சால உன்னி நெஞ்சிலே தரித்ததே சிவாயமே” (சிவவாக்கியர், பா. 487)
“நன்மையாக உம்முளே நயந்து காண வேண்டுமே” (சிவவாக்கியர், பா. 494)
“தெள்ளு ஞானம் உம்முளே சிறந்ததே சிவாயமே” (சிவவாக்கியர், பா. 495)
“ஊனை காட்டி உம்முளே உகந்து காண வல்லிரே” (சிவவாக்கியர், பா. 503)
“எட்டிரண்டும் கூடியே இலிங்கமான தேவனை
மட்டதாக உம்முளே மதித்து நோக்க வல்லிரேல்” (சிவவாக்கியர், பா. 505)
“வானில் உள்ள சோதி அல்ல சோதி நம்முள் உள்ளதே” (சிவவாக்கியர், பா. 521)
“நோய்கள் பட்டு உழல்வது ஏது நோக்கிப் பாரும் உம்முளே” (சிவவாக்கியர், பா. 523)
“நும்முளே விளங்குவோனை நாடி நோக்க வல்லிரேல்
இம்மலமும் மும்மலமும் எம்மலமும் அல்லவே” (சிவவாக்கியர், பா. 544)

இப்பாடல்கள் அனைத்தும் இறைவன் நம் உள்ளத்திலேயே இருக்கிறான் என்பதை உறுதியாக அறுதியிட்டுச் சொல்கிற பாடல்களாகும். இறைவன் வந்து உள்ளத்தில் புகுந்து கொண்டால் வாய் திறவாத மோன நிலைக்குச் செல்லலாம் என்று சிவவாக்கியர் கூறுகின்றார். சிவந்த தேங்காயில் இளநீர் திரண்டதைப்போல் உள்ளத்தில் இறைவன் புகுந்துள்ளான் என்றும் கூறுகிறார்.

செய்யதெங்கு இளநீர் சேர்ந்த காரணங்கள் போல்
ஐயன்வந்து என்னுள் புகுந்து கோயில் கொண்டனன்
ஐயன்வந்து என்னுள் புகுந்து கோயில் கொண்டபின்
வையகத்தில் மாந்தர் முன்னம் வாய்திறப்பது இல்லையே" (சிவவாக்கியர், பா. 33)

### நிறைவாக

சித்தர்களுள் சிவவாக்கியர் மிகப் பெரிய புரட்சியாளராகத் திகழ்கிறார். கடவுள் நெறியில் இவருடைய நெறி தனித்த நிலையில் சிறப்பாகத் திகழ்கிறது. இறைவன் உள்ளத்தில் உரைகின்றான் என்று முன்னோர் மொழிந்த மொழிகளைப் பொன்னே போல் போற்றி பல பாடல்களில் அழுந்தத்திருத்தமாக உரைக்கின்றார். புறச் சடங்குகளுக்கும் பூசனைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல் அகச் சடங்கிற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றார். "உள்ளத்தில் உள்ளான் அடி அது நீ உணர வேண்டுமடி, உள்ளத்தில் காண்பாய் எனில் கோயில் உள்ளேயும் காண்பாய் அடி" (மலரும் மாலையும், கோயில் வழிபாடு) என்று கவிமணியும் சிவவாக்கியரின் கருத்தை அடியெற்றிக் கூறுவதையும் இங்கே எண்ணிப் பார்க்கலாம். எனவே இறைவன் உள்ளத்தில் உள்ளான் என்பதை ஓர்ந்து உணர்ந்து தெளிந்து நடந்தால் முக்தி நிலை அடைய முடியும் என்பதே இக்கட்டுரையின் முடிபாகும்.

### துணைநின்ற நூல்கள்


1. பேராசிரியர் முனைவர் த.ந.கணபதி, தமிழ்ச் சித்தர் மரபு (இரண்டாம் பதிப்பு), ரவி பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2005.
2. முனைவர் அ. அறிவொளி, சித்தர் பாடல்கள் மூலமும் உரையும் (இரண்டு தொகுதிகள்), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2019.
3. எஸ்.பி. இராமச்சந்திரன், சித்தர்கள் வரலாறு (மூன்றாம் பதிப்பு), தாமரை நூலகம், சென்னை, செப்டம்பர் 2012.
4. பேராசிரியர் மு.சுந்தரேசன், சித்தர்கள் வரலாறு (முதற் பதிப்பு), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2019.
5. பேராசிரியர் மு.சுந்தரேசன், சித்தர்கள் தந்த கொடை (முதற் பதிப்பு), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2019.
6. ஜி.வரதராஜன், திருமந்திரம் விரிவுரை (மூன்று தொகுதிகள்) எட்டாம் பதிப்பு, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 2015.
7. திருஞானசம்பந்தர், தேவாரம், மூன்றாம் திருமுறை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
8. திருநாவுக்கரசர், தேவாரம், ஐந்தாம் திருமுறை, ஆறாம் திருமுறை, வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
9. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, மலரும் மாலையும், பாரி நிலையம், சென்னை, 1960.
10. கழகத் தமிழ் அகராதி (இரண்டாம் பதிப்பு), கழக வெளியீடு, சென்னை, 1969.